## வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை– 2018

| தரம் - 8 | சித்திரக்கலை | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ………………..

| பகுதி | புள்ளிகள் | |
|---|---|---|
| 1 | 30 | |
| 11 | 50 | |
| 111 | 20 | |
| மொத்தம் | 100 | |

### பகுதி – I

❖ **கீழே உள்ள நிழல்ப்படங்களை அவதானித்துத் தரப்பட்ட வாக்கியங்களின் இடைவெளிகளை பொருத்தமான விடையினைக் கொண்டு நிரப்புக.**



அ



ஆ



இ

Education கல்வி අධ්‍යාපන

1) மேலே உள்ள இ,ஆ,இ ஆகிய படங்களைக் குறிக்கும் கலை வேலைப்பாடுகள் ……………………… எனப்படும்.

2) இப் பாரம்பரிய வேலையில் ……………………… மற்றும் வார்ப்பு வேலை எனும் இரண்டு பிரதான நுட்ப முறைகள் பின்பற்றப்படுகின்றது.

3) படம் 'ஆ' ஆனது வார்ப்பு வேலையில் பயன்படுத்தப்படும் ……………………… நுட்ப முறையைக் காட்டுகிறது.

4) படம் 'இ' ஆனது வார்ப்பு வேலையில் பயன்படுத்தப்படும் ……………………… நுட்ப முறையை காட்டுகின்றது.

5) இப் பாரம்பரிய வேலைப்பாட்டிற்கு யாழ்ப்பாணத்தின் ……………………… எனும் ஊர் பிரபல்யம் அடைந்துள்ளது.

❖ **தரப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.**

6) "அம்பு துளைத்த பைசன் வடிவமும் நிலத்தில் சாய்ந்து கிடக்கும் மனித உருவமும்" எனும் ஓவியம் வரையப்பட்டுள்ள குகை.

1) அல்ராமீரா  2) லாஸ்கோ குகை

3) தந்திரிமலைக்குகை  4) தொரவக்ககுகை.



kalvi.lk

7) தெய்வீக வகுதிக்குள் அடங்கும் அலங்காரம்.

1) குத்தரிக்கம் 2) நீரலை 3) சிம்மம் 4) சந்திரன்

8) செம்மஞ்சளின் எதிர் வர்ணம்.

1) ஊதா 2) பச்சை 3) நீலம் 4) கபிலம்

9) 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இழந்த சக்தியை பெறும் நோக்கில் நடைபெறும் சடங்கு.

1) தேர்த்திருவிழா 2) கும்பாபிசேகம்

3) சூரன் போர் 4) சுமங்கலிப்பூஜை

10) பின்வருவனவற்றில் களனி எனும் ஊர் புகழ் பெற்று விளங்குவது.

1) மட்பாண்ட வேலை 2) பித்தளை .வேலை

3) மர வேலை 4) பாய் வேலை.

❖ **கீழே வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கீறிடுக.**

11) பிரச்சினைகளை தீர்க்கும் சந்தர்ப்பத்தினைக் குறிக்கும் முத்திரை விதர்க்க முத்திரையாகும். ( )

12) பத்திராசன பீடம் முக்கோண வடிவில் அமைக்கப்படும். ( )

13) நான்கு அன்னங்களைக் கொண்ட கூட்டு அலங்காரங்களை பூமியை பரிசம் செய்யும் முறையில் உள்ள ஆசன முறை பத்மாசனமாகும். ( )

14) முழங்கால் இரண்டையும் முடிந்து உள்ளங்கால்களை பூமியைப் பரிசம் செய்யும் முறையில் உள்ள ஆசனம் பத்மாசனமாகும். ( )

15) அபய முத்திரை தர்ம உபதேசம் செய்யும் சந்தர்ப்பத்தைக் குறிக்கிறது. ( )

❖ **கீழே தரப்பட்ட வினாக்களுக்கு பொருத்தமான விடையினைப் புள்ளிக் கோட்டின் மீது சுருக்கமாக எழுதுக.**

16) பரவருவச்சித்திரம் என்றால் என்ன?

.....................................................................................................................

17) வரமளித்தலைக் குறிக்கும் முத்திரை யாது?

.....................................................................................................................

18) இலங்கையில் இன்று காணப்படாத தாதுகோபத்தின் வடிவம் ஒன்று தருக?

.....................................................................................................................

19) சேரமான் அரசனின் நோயைத் தீர்க்க மேற்கொள்ளப்படும் சடங்கு ஒன்றினைக் குறிப்பிடுக?

.....................................................................................................................


20) பத்மாசனம் எம் மலரினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்?

.....................................................................................................................



kalvi.lk

❖ கீழே உள்ள **A,B,C,D,E** நிழற்படத்தினை அவதானித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைக் குறித்து நிற்கும் படத்தின் எழுத்தினைக் குறிப்பிடுக.



A B C D E

21) லலிதாசனத்தைக் குறித்து நிற்கும் படம் யாது?

..............................................................................................................

22) பாரம்பரிய வேலைப்பாட்டிற்குப் பயன்படும் கருவியினைக் காட்டும் நிழல் படம் யாது?

..............................................................................................................

23) இலங்கையின் பாரம்பரிய கிரியைக்குப் பயன்படும் அலங்காரக் கொட்டகையைக் காட்டும் படம் எது?

..............................................................................................................

24) பத்மாசன முறையில் அமைந்துள்ள வடிவத்தைக் குறிக்கும் படம் யாது?


..............................................................................................................

25) பரியங்க ஆசனத்தைக் குறிக்கும் நிழல்படம் யாது?

..............................................................................................................

Education கல்வி அதியாபன

❖ கீழே உள்ள நிரல் படத்தினை அவதானித்து அவ்விடயம் தொடர்பாக வரும் வினாக்களுக்கு விடை தருக.



26) இவ் ஓவியங்கள் எக் குகையில் வரையப்பட்டுள்ளன?

..............................................................................................................



kalvi.lk

27) இங்கு வரையப்பட்டுள்ள மிகப் பெரிய பைசன் எருதின் நீளம் யாது?

.....................................................................................................

28) இவ் ஓவியம் எவ் நுட்பமுறையில் வரையப்பட்டுள்ளது?

.....................................................................................................

29) விலங்கு உருவங்கள் தவிர இங்கு வரையப்பட்டுள்ள ஏனைய உருவங்கள் யாவை?

.....................................................................................................

30) இங்கு வரையப்பட்டவைகளில் மிக முக்கியமாக வரையப்பட்ட ஓவியம் யாது?

.....................................................................................................

(30x1=30 புள்ளிகள்)

## பகுதி II

❖ **கீழே தரப்பட்ட தலைப்புக்களில் இருந்து ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து அதனை வரைக.**

1) கதிர் அறுக்கும் மக்கள்.
2) பரபரப்பான பஸ் நிலையம்.
3) வாவிக்கரையில் வனவிலங்கைப் பார்வையிடுவோர்.
4) சேலைக்கரை முந்தானை.
5) வர்ணத் தாவர இலைக் கோலங்களைப் பயன்படுத்தி பரவுருவச் சித்திரம் வரைக.
6) மத்தியில் இருந்து விரிந்து செல்லும் வகையில் பூ வடிவத்தைப் பயன்படுத்தித் தழுவனை உறை ஒன்றனை வரைக.
7) வணிக நிலையம் ஒன்றின் முன் வைக்கப்படும் பெயர் பலகையொன்றினை வரைக.
8) சிறுவர் பாடல் அல்லது நூல் ஒன்றுக்கு சித்திரம் வரைக.

(50 புள்ளிகள்)


kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!
# MATHS
## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| **TAMIL MEDIUM** | **ENGLISH MEDIUM** |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page